**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித் திங்கள் 19 ம் நாள்

**இடைநிலை மனு எண். 55/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 13/2017**

சுதா .... மனுதாரர்/வாதி

**// எதிர்//**

1. செல்லம்பிராசு (இறந்தவர்)
2. ராமலிங்கம் .... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1 வது எதிர்வாதி செல்லம்பிராசு முகவரிக்கு அடுத்து இறந்தவர் என்று சேர்த்து வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவின் சுருக்கம் :-</u>**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். வாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் மனுதாரர் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. வழக்கு விசாரணையில் இருந்து வரும் நிலையில் இந்த வழக்கின் 1ம் எதிர்மனுதாரர் செல்லம்பிராசு இறந்துவிட்டதாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கேட்கப்பட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் என்பது ஒரு தனி நபருக்கு எதிரான பரிகாரம் என்பதாலும், அந்த வகையில் 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டதால் வழக்கு சொத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரருக்கு தொடர்ந்து வழக்கு மூலம் அற்றுபோய்விட்டது. அதனால் 1ம் எதிர்மனுதாரரின் வாரிசுதாரர்களை இந்த வழக்கின் தரப்பினர்களாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. எனவே அசல் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1ம் எதிர்மனுதாரர் செல்லம்பிராசு முகவரிக்கு அடுத்து இறந்தவர் என்று சேர்த்து வழக்கை நடத்த அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **<u>2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலை நிற்க கூடியதல்ல. இதனடியில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க வேண்டியவர். அதனை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். மனுதாரர் இந்த மனுவினை காலதாதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட நோக்கத்திலும்,

எதிர்மனுதாரருக்கு வீண் மன உளைச்சலை கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அசல் வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 23.08.2024ம் தேதியிலேயே இறந்துவிட்ட நிலையில் உரிய காலத்திற்குள் மனு தாக்கல் செய்யாமல் காலம் தாழ்த்தி மனுதாரர் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் வழக்கினை காலதாமதப்படுத்தும் நோக்கிலும், வழக்கினை இழுத்தடித்து எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கெட்ட உள்நோக்கத்திலும் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர் கரைபடிந்த கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகியுள்ளார். மேற்படி மனுதாரர் அசல் வழக்கில் வழக்கினை வேண்டுமென்றே இழுத்தடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தற்பொழுது இதுபோன்ற மனுக்களை கொடுத்துள்ளது சட்டப்படி தவறானது. மேலும் எதிர்மனுதாரருக்கு யாதொரு நீதியின் பலனையும் அடைந்து விடக் கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இம்மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

5) <u>தீர்வு</u> :-

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலிக்கும் போது, அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, மனுதாரர் தரப்பில் மனுதாரர் சாட்சியாக முதல் விசாரணை செய்யப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா போடப்பட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால் மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரிய வருகிறது.

**4.** மேற்படி மனுதாரர்/வாதி தரப்பில் அசல் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1ம் எதிர்மனுதாரர் செல்லம்பிராசு பெயருக்கு அடுத்தும் மற்றும் முகவரிக்கு அடுத்தும் இறந்தவர் என்று சேர்த்து திருத்தம் செய்து அசல் வழக்கை மேல் நடத்த அனுமதியளிக்க வேண்டும் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதும், நீதியின் நலன் கருதியும், வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவது இல்லை என்பதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

6) **முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்து-தட்டச்சரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 02.04.2025) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை :- **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆம் நாள் புதன்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2055 ஸ்ரீ குரோதி வருடம் பங்குனித் திங்கள் 19 ம் நாள்

**இடைநிலை மனு எண். 55/2025 -ல்**

**அசல் வழக்கு எண். 13/2017**

திருமதி. சுதா, வயது 45, க/பெ. நாராயணசாமி, இந்து, வசிப்பிடம் நடுத் தெரு, காரக்கோட்டை கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/வாதி

// எதிர்//

1. செல்லம்பிராசு (இறந்தவர்)
2. திரு. ராமலிங்கம், வயது 52, த/பெ.செல்லம்பிராசு, இந்து, வசிப்பிடம் அத்தானியார் தெரு, எடமேலையூர் கிராமம், மன்னார்குடி வட்டம், திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்கள்/எதிர்வாதிகள்

இம்மனுவானது அசல் வழக்குரையில் குறுந்தலைப்பு மற்றும் நெடுந்தலைப்பில் 1 வது எதிர்வாதி செல்லம்பிராசு முகவரிக்கு அடுத்து இறந்தவர் என்று சேர்த்து வழக்கை நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 29.01.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 31.01.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ஜீவானந்தம், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இது நாள் வரை என் பரிசீலணையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**A. சீதாலெட்சுமி**)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.